**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.810/2022**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **லெட்சுமணன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ராமன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை.)
**(10.08.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் கடந்த 10.05.2021ம் தேதி மாலை 6 மணியளவில் சம்பவயிடத்தை காண்பிப்பதற்காக என்னிடம் வி.ஏ.ஓ. கேட்டுக் கொண்டதன்பேரில் நான் அங்கு சென்றேன். போலீசாரும் அங்கு வந்தார்கள். சம்பவயிடத்தை போலீசார் வரைபடம் வரைந்து தயார் செய்தார்கள். அதில் பார்வை மகஜரில் முதல் கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். பார்வை மகஜர் அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் அழகுமணிகண்டன் என்பவரும் கையெழுத்து செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் எதற்கு படம் வரைந்து கையெழுத்து வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என்னுடன் அப்போது யார் இருந்தார் என்றால் அழகுமணிகண்டன் என்பவர் இருந்தார். வி.ஏ.ஓ. சொன்னதன் அடிப்படையில்தான் அங்கு நான் சென்றேன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் சம்பவயிடம் அருகே சென்று கொண்டிருக்கும்

போது காவல்நிலையத்தார் படம் வரைந்து கொண்டிருந்ததாகவும் அதில் நான் கையொப்பம் செய்ததாகவும் நான்



சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** -- இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.810/2022**

**Prosecution Witnesses : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **அழகுமணிகண்டன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **முருகன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை.)**
**(10.08.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் கடந்த 10.05.2021ம் தேதி நேரம் ஞாபகமில்லை. திருமங்கலம் மெட்டல் பவுடர் கம்பெனி அருகே விபத்து நடந்தது. அங்கு போலீசார்

கூப்பிட்டார்கள். நானும் சம்பவயிடத்திற்கு சென்றேன். சம்பவம் தொடர்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு போலீசார் வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் வரைந்த வரைபடம் மற்றும் மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அது எதற்காக வரையப்பட்டது என்றால் விபத்து நடந்தது சம்பந்தமாக வரையப்பட்டது. சம்பவயிடத்திற்கு வேறு எந்த அதிகாரியும் இருந்தார்களா? என்றால் இல்லை. நண்பர் விபத்தில் இறந்துவிட்டார் என்ற உதவியின் அடிப்படையிலேயே போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** -- இல்லை.